1971 ஜூன் 26]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்போது பெயர்மாற்றம்தான் செய்யப்பட்டிருக்கிறதே தவிர அதிகார மாற்றம் செய்யப்படவில்லை. நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆறுமுகம்: மாவட்ட நேர் உதவியாளர்களின் பெயரை மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று மாற்றியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த க்ரேடில் மாவட்டத்தில் பல மாவட்ட அதிகாரிகள் இருப்பதனால் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்ற பெயரில் ஒரு மரியாதை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, முன்பு இருந்ததைப்போலவே மாவட்ட ஆட்சியரின் நேர் உதவியாளர் என்ற பெயரையே வைக்க பரிசீலிக்க முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாவட்ட ஆட்சியரின் நேர் உதவி அலுவலர் என்றால் அவருக்கே உதவி செய்யக்கூடியவரைப்போல இருக்கிறது. இவர்களிடம் இப்போது தனிப் பொறுப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினல் அவர்களுடைய கோரிக்கையின் பேரிலேயே இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி அலுவலர் என்று பெயரை மாற்றியிருப்பது போல, கோட்ட அளவில் டி. டி. ஓ. என்று பெயர் மாற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

அமராவதி நீர்த்தேக்கத் திட்டப்பகுதியில் கிணறுகளும் விசை ஏற்றங்களும்

* 61 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று கோவை மாவட்டத்தில் அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில் 2,000 கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் அமைக்கும் வேலை எப்பொழுது துவக்கப்படும்?

(இ) மேற்படி வேலை எந்தத் தேதியில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) வினுவில் குறிப்பிட்ட ஒன்று ஏற்கனவே 30-9-1969 இல் தொடங்கப்பட்டுவிட்டது.

(இ) இந்தத் திட்டம் 30-6-73 இல் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாயிரம் கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் 73-க்குள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். 69-இல் துவங்கப்பட்டது என்றாலும் இதுவரை எவ்வளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது ? 73-க்குள் முடிக்க என்ன என்ன ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏப்ரல் 30-ஆம் தேதி வரை மூன்றில் ஒரு பங்கு முடிந்திருக்கிறது. அதாவது 635 முடிந்துவிட்டது. வேலை விரைவாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : கிணறுகள் தோண்டுவதற்கு நாம் திட்டம் வைத்திருப்பதனால் அமராவதி சர்க்கரை ஆலைக்கு கரும்பு அனுப்பும் விவசாயிகளுக்கு முதலிடம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அதற்கான விடை தயாராக இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமராவதி நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் எடுக்கப்படும் இரண்டாயிரம் கிணறுகளின் மூலமாக எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, ஏறத்தாழ இத்தனை கிணறுகள் என்ற அளவில்தான் விவரங்கள் இருக்கின்றன. எத்தனை ஏக்கர் பரப்புள்ள நிலங்களுக்குப் பாசனம் தரும் என்பதைப்பற்றிய புள்ளிவிவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கிணறுக்கு மூன்று ஏக்கர் என்ற அளவு இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து உதவி பெற்று அமராவதி நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் 2,000 கிணறுகளும், 2,000 விசையேற்றங்களும் அமைத்துக்கொடுக்கும் திட்டம் இருக்கிறது. இம்மாதிரி திட்டம் வேறு ஏதாகிலும் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : விவசாய மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து கடன் உதவியைப்பெற்று, பல திட்டங்கள் செய்யப்படுகின்றன. பொள்ளாச்சி போன்ற பகுதியிலும் இப்படிப்பட்ட திட்டம் இருக்கிறது.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் வைகைப் பகுதியிலே விஸ்தரிக்கப்படுமா ?

1971 ஜூன் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை அனுமதிப்பதற்கு மறுக்கிறேன். மூலக் கேள்வி அமராவதி நீர்த்தேக்கத் திட்டப்பகுதியைப் பொறுத்ததே அல்லாமல் வைகையைப் பற்றியது அல்ல.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இம்மாதிரியான திட்டத்தை வறட்சிப் பகுதிகளிலே அமலாக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவர் அவர்களே, கிணறுகள் வெட்டி, பம்பு செட்டுகள் வைத்துக்கொடுக்கும்படியான திட்டங்கள் வறட்சிப் பகுதிகளுக்குக்கூட இருக்கின்றன. ஆனால், அந்த இடங்களில் முதலில் பரிட்சார்த்தமாக குழாய்க் கிணறுகளை அமைத்துப் பார்த்து, தகுந்த அளவில் தண்ணீர் கிடைக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்த பிறகுதான், அந்தப் பகுதிகளுக்குக் கடன் வழங்குவதற்கும், மற்ற வேலைகள் செய்வதற்கும் திட்டம் செய்ய வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, apart from Udumalpet taluk in Coimbatore district, may I know from the Hon. Minister for Co-operation the other places where this scheme has been introduced with the assistance of Agricultural Refinance Corporation ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, practically we have schemes covering the entire State. Already we have introduced the scheme in Coimbatore, Thanjavur, parts of Tiruchirappalli, parts of Tirunelveli and many other districts. The Scheme is supported by the Agricultural Refinance Corporation, that is, money is received from the Agricultural Refinance Corporation and is distributed to the ryots and cultivators for the purpose of wells and pumpsets.

கடலூர் துறைமுகம்

*** 62 வின.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுக அபிவிருத்தி தற்போது எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளது ?

(இ) எந்த ஆண்டில் முழு வேலையும் முடிவு பெறும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) (1) துறைமுகத்தையொட்டிய உப்பனுறு, பரவனுறு ஆகிய ஆறுகளின் படுகைகளை திருத்தியமைக்கின்ற அந்தப் பணி முடிந்துவிட்டது. (2) மொத்தம் 800 அடி நீளம் தோணித்துறை (Jetty) 413 அடி நீளம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. (3) தெற்குப் பகுதியில் அலைத்தடுப்பு சுவர் 340 அடி கட்டி முடிந்துவிட்டது.